## சிறப்புக் குறிப்பு 02

## ஊழியர் சேமலாப நிதியத்தின் அடிப்படையிலான முறைசார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணினைப் பயன்படுத்தித் தனியார் துறைக் கூலி இயக்கவாற்றல்களில் உள்ள தரவு சார்ந்த இடைவெளிகளை நிவர்த்திசெய்தல்

தொழிலாளர் சந்தை நிலைமைகள் பணவீக்கம் மற்றும் ஒட்டுமொத்த பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றில் செல்வாக்குச்செலுத்துகின்ற முக்கிய வழியொன்றினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதனால் கூலி நடத்தையினைக் கண்காணிப்பதானது நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளலிற்கு அத்தியாவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. தொழிலாளர் உற்பத்தித்திறனில் ஏற்படுகின்ற மாற்றங்களுடன் ஒத்திசைந்து செல்கின்ற கூலித் தளம்பல்கள் விலை உறுதிப்பாட்டினைப் பேணும் வேளையில் நீடித்துநிலைத்திருக்கின்ற பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும்[1]. ஆதலால், இந்நோக்கத்திற்காக, இலங்கை மத்திய வங்கியானது பல்வேறு சுட்டெண்களினைப் பயன்படுத்துகின்ற வேளையில் தொழிலாளர் திணைக்களத்தினால் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்படுகின்ற முறைசார் தனியார் துறைக் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணானது முறைசார் தனியார் துறையின் கூலி இயக்கவாற்றல்களினை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இச்சுட்டெண்ணின் முக்கிய அனுகூலமொன்றாக அதன் மாதாந்தக் கிடைப்பனவு காணப்படுவதுடன், இது குறைந்தபட்ச கூலிப் போக்குகளினைக் காலந்தவறாமல் கண்காணித்து, பணவீக்கம் மற்றும் தொழிலாளர் சந்தை நிலைமைகள் தொடர்பான பகுப்பாய்வுகளிற்கு ஆதரவளிக்கின்றது. இருப்பினும், இச்சுட்டெண்ணானது பல்வேறு வரையறைகளினைக் கொண்டுள்ளது. அடிப்படை ஆண்டாக 1978 திசெம்பரில் இது அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 21 கூலிச் சபைகளிற்கான குறைந்தபட்ச கூலிகளினை உள்ளடக்கின்ற இச்சுட்டெண்ணானது, கூலிச் சபை எண்ணிக்கை 44இற்கு அதிகரித்துள்ள போதிலும் இற்றைப்படுத்தப்படாதுள்ளது. இதன் விளைவாக, அதனைத்தொடர்ந்து நிறுவப்பட்ட கூலிச் சபைகளில் ஏற்பட்ட கூலி அபிவிருத்திகளினைச் சுட்டெண்ணானது பிரதிபலிக்கத் தவறுகின்றது. மேலும், கூலிச் சபைகளினால் உள்ளடக்கப்படுகின்ற ஊழியர்கள் ஒட்டுமொத்த தனியார் துறைத் தொழிற்படையின் பகுதியொன்றினை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்துவதானது முழுமையான முறைசார் தனியார் துறையின் குறைந்தபட்ச கூலிக் கட்டமைப்பினைச் சுட்டெண் பிரதிபலிப்பதில்லை என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. மேலும், உண்மையான வருவாய்களிலும் பார்க்க நியதிச்சட்ட குறைந்தபட்ச கூலிகளினைப் பயன்படுத்தி சுட்டெண்ணானது கணக்கிடப்படுகின்றது. குறைந்தபட்ச கூலிகள் அடிக்கடி திருத்தப்படுவதில்லையென்பதுடன், அடிப்படைக் கூலிகள், மாறுபடுகின்ற கொடுப்பனவுகள் மற்றும் பல்வேறு படிகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒட்டுமொத்த வருவாய்கள் தொழிலாளர் சந்தை நிலைமைகளிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் மிகவும் தொடர்ச்சியாக சீராக்கப்படுவதனால், கூலிச் சீராக்கங்களின் உண்மையான இயக்கவாற்றல்களினைப் பிரதிபலிப்பதற்கான இந்த சுட்டெண்ணின் இயலுமையினை வரையறைக்குட்படுத்தலாம். இவ்வரையறைகளினைக் கருத்திற்கொண்டு, தனியார் துறையின் கூலி அசைவுகளினை மிகவும் துல்லியமாகப் பிரதிபலிக்கின்ற குறிகாட்டியொன்றினைக் கட்டியெழுப்புகின்ற நோக்கில், ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புக்களிலிருந்தான தரவுகளினைப் பயன்படுத்தி மாற்று தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணொன்றினை உருவாக்கும் பணியினை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்துள்ளது.[2]

### ஓய்வூதிய நிதியப் பங்களிப்புத் தரவுகளைப் பயன்படுத்துவதற்கான நியாயபூர்வதன்மை

தற்போதுள்ள கூலிப் புள்ளிவிபரங்களின் வரையறைகள் மற்றும் தனியார் துறைக் கூலி இயக்கவாற்றல்களினை மதிப்பிடுவதற்குக் காலந்தவறாததொரு குறிகாட்டியின் தேவை ஆகியவற்றினைக் கருத்திற்கொண்டு, நிர்வாகத் தரவு மூலங்கள் பரிசீலனையில் கொள்ளப்பட்டன. இவற்றினுள், பேரண்டப்பொருளாதார மற்றும் நாணயக் கொள்கைப் பகுப்பாய்விற்குத் தொடர்புடைய தொழிலாளர் செலவு சார்ந்த மாற்றங்களினைக் கண்காணிப்பதனை மேம்படுத்தும் பொருட்டு உயர் அதிர்வெண் கொண்ட தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணொன்றினை உருவாக்குவதற்கு ஓய்வூதிய நிதியப் பங்களிப்புப் பதிவுகள் பொருத்தமான அடிப்படையொன்றாக அடையாளம் காணப்பட்டன. இப்பகுப்பாய்வானது திரட்டப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய நிர்வாகத் தரவுகளின் அடிப்படையிலமைந்துள்ளதுடன் தனிநபர் மட்டத்திலான எந்தவொரு தகவலும் பயன்படுத்தப்படவில்லையென்பதானது பங்களிப்பாளர்களின் இரகசியத்தன்மையினை நிச்சயப்படுத்துகின்றது.

### தரவு மூலம் மற்றும் முறைமையியல் சார்ந்த அணுகுமுறை

கூலி வீதச் சுட்டெண்ணானது 2017 சனவரி தொடக்கம் 2025 திசெம்பர் வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து பெறப்பட்ட நிர்வாக ரீதியிலான தரவுகளைப் பயன்படுத்திக் கட்டமைக்கப்பட்டுள்ளது. தரவுத் தொகுதியானது பல பங்களிப்புப் பெறுமதிகளிற்கு வகைகூறுகின்ற இணையவழி

1 Bank for International Settlements (2010), Monetary policy and the measurement of inflation: prices, wages and expectations, BIS Papers No. 49, Basel: Bank for International Settlements. பின்வரும் இணைப்பினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும் : https://www.bis.org/publ/bppdf/bispap49.pdf (அணுகப்பட்டது: 2026 மாச்சு 20).

2 இலங்கை மத்திய வங்கியானது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்துடன் இணைந்து முறைசார் தனியார் துறைக்கான புதிய கூலி வீதச் சுட்டெண்ணொன்றினை ஆராய்ச்சிசெய்து தொகுக்கின்ற பணிகளை ஆரம்பித்தது. மேலும், சுட்டெண்ணைத் தொகுப்பதில் பயன்படுத்தப்படுகின்ற முறையியலைச் சரிபார்க்கும் பொருட்டு பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடம் ஆகியவற்றிலிருந்தான நிபுணர் வழிகாட்டலினை இலங்கை மத்திய வங்கியானது நாடியுள்ளது.


மற்றும் இ-ஊடக வழிகளுடன் கையேடு, இணையவழி மற்றும் இ-ஊடகத் தளங்கள் என்பன ஊடாகச் சமா்ப்பிக்கப்பட்ட தொழில்தருநரினால் அறிக்கையிடப்பட்ட பங்களிப்புப் பதிவுகளினைக் கொண்டுள்ளமையானது முறைமைசார் துறைத் தொழில்வாய்ப்பின் பரந்தளவிலான உள்ளடக்கத்தினை நிச்சயப்படுத்துகின்றது. இது தொழில்தருநர் அடையாளங்காட்டிகள், ஊழியர்களின் எண்ணிக்கை, பங்களிப்புப் பெறுமதிகள் மற்றும் அறிக்கையிடல் காலப்பகுதிகள் போன்ற முக்கிய மாறிகளினை உள்ளடக்கி, உயர் அதிர்வெண் கொண்ட கூலிக் குறிகாட்டியொன்றின் தொகுப்பினை இயலச்செய்கின்றது. அறிக்கையிடல் சார்ந்த காலதாமதங்களில் உள்ள வேறுபாடுகளினைக் கருத்திற்கொண்டு, அண்மைய கால கொள்கைப் பகுப்பாய்விற்குக் காலந்தவறாத பகுதியளவிலான தரவுத் தொகுதிகளைப் பயன்படுத்த முடிவதுடன் உத்தியோகபூர்வ வெளியீட்டிற்கு இறுதிசெய்யப்பட்ட தரவுத் தொகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

சுட்டெண்ணானது ஒப்பீட்டளவில் உறுதியான கூலி நிலைமைகளினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அடிப்படைக் காலப்பகுதியாக 2017 சனவரி மாதத்தினைப் பயன்படுத்தித் தொகுக்கப்பட்டுள்ளது. மதிப்பீடுசெய்யப்பட்ட மாற்றுச் சுட்டெண் அணுகுமுறைகளில், அதன் அனுபவ ரீதியிலான செயலாற்றம் மற்றும் சீராந்தன்மை என்பவற்றின் அடிப்படையில் லாஸ்பியா்ஸ் முறை தேர்ந்தெடுக்கப்பட்டது. நிலையான அடிப்படைக் காலப்பகுதி நிறையேற்றங்களைப் பயன்படுத்துகின்ற இவ்வணுகுமுறையானது பன்னாட்டு நடைமுறையில் பரவலாகப் பின்பற்றப்படுவதுடன் காலப்போக்கில் கூலி அசைவுகளின் உறுதியான அளவீடொன்றினை வழங்குகின்றது.

நிர்வாக ரீதியிலான தரவானது கால இடைவெளி, உள்ளடக்கம் மற்றும் தொகுப்பு ஆகியவற்றிற்கமைய அளவீட்டின் அடிப்படையிலமைந்த கூலிப் புள்ளிவிபரங்களிலிருந்து வேறுபடுகின்றது. ஓய்வூதிய நிதியப் பங்களிப்புப் பதிவுகள் கட்டாய அறிக்கையிடல் ஊடாக உருவாக்கப்படுவதுடன் சம்பளப் பட்டியல்

சி.கு வரைபடம் ஆ 2.1


ஊழியர் சேமலாப நிதிய தரவு அடிப்படையிலான தொழில்நிலையின் போக்கு




மூலம் : இலங்கை மத்திய வங்கி அலுவலகர்களின் கணிப்புகள்

சி.கு வரைபடம் ஆ 2.2

ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான முறைசார் துறைக்கான கூலி வீத சுட்டெண்ணின் போக்கு




*மூலம் :* இலங்கை மத்திய வங்கி அலுவலகர்களின் கணிப்புகள்

தகவல்களினைப் பிரதிபலித்து, அவற்றினை மாதிரிப்படுத்தல் சார்ந்த மாறுபடக்கூடியதன்மையினால் குறைந்தளவில் பாதிப்படையச்செய்கின்றன. இதற்குமாறாக, அளவீட்டின் அடிப்படையிலமைந்த கூலிப் புள்ளிவிபரங்கள் காலாந்தர ரீதியில் தொகுக்கப்படுவதுடன் தரவுச் சேகரிப்பு மற்றும் செயன்முறைப்படுத்தல் என்பவற்றிற்கு மேலதிக காலத்தினை எடுத்துக்கொள்கின்றன. அளவீடுகள் தொழில்வாய்ப்புக் கட்டமைப்புக்கள் மற்றும் வருமானப் பகிர்ந்தளிப்பு என்பவற்றிற்கு நுண்ணோக்குகளினை வழங்குகின்ற வேளையில், அவற்றின் தாழ்ந்தளவிலான கிடைப்பனவானது குறுங்காலக் கூலி அசைவுகளினை உள்ளடக்குவதற்கு அவற்றினைக் குறைந்தளவில் பொருத்தமுடையனவாக மாற்றுகின்றது. இதற்கமைய, நிர்வாக மற்றும் அளவீட்டுத் தரவுகள் குறைநிரப்புகின்ற நோக்கங்களிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஓய்வூதிய நிதியப் பங்களிப்புப் பதிவுகள் துறைகளிலுள்ள முறைசார் துறை தொழில்வாய்ப்பில் ஏறத்தாழ 60 சதவீதத்தினை உள்ளடக்கி, கூலி வீதச் சுட்டெண்ணின் பிரதிநிதித்துவத்தினை மேம்படுத்துகின்றது. கூட்டுக் கேள்வியினை உந்துவதிலும் கூலி சார்ந்த அழுத்தங்களினை விலைகளிற்கு ஊடுகடத்துவதிலும் முறைசார் தனியார் துறையின் வகிபாகத்தினைக் கருத்திற்கொண்டு, அதன் மீது கவனம் செலுத்துவதானது

சி.கு வரைபடம் ஆ 2.3

ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான முறைசார் துறைக்கான கூலி வீத சுட்டெண்ணின் போக்குகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி அலுவலகர்களின் கணிப்புகள்


தொடர்ந்தும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. இத்தரவின் முக்கியமானதொரு நன்மையாக மாதாந்த ரீதியில் கிடைக்ககூடியதன்மை காணப்பட்டு, கூலி அசைவுகளினைக் காலந்தவறாமல் கண்காணிப்பதனையும் வளர்ச்சியடைந்து வருகின்ற போக்குகளினை முன்கூட்டியே அடையாளம் காண்பதனையும் இயலச்செய்கின்றது. இத்தகைய தரவுகள் இல்லையெனில், கொள்கைப் பகுப்பாய்வானது காலங்கடந்த தகவல்களினைச் சார்ந்திருக்க நேரிட்டு, கூலி-விலை இயக்கவாற்றல்களின் காலந்தவறாத மதிப்பீட்டினை வரையறைக்குட்படுத்தலாம்.

காலப்போக்கில் சீரானதன்மையினையும் ஒப்பீட்டுத்தன்மையினையும் நிச்சயப்படுத்தும் பொருட்டு சுட்டெண்ணானது திரட்டப்பட்ட ஓய்வூதிய நிதியப் பங்களிப்புப் பதிவுகளினைப் பயன்படுத்தி நிலையான அடிப்படைக் காலப்பகுதியொன்றுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது. முறைசார் துறையினுள் ஒட்டுமொத்த கூலி அசைவுகளினைப் பிரதிபலிக்கின்ற சுட்டெண்ணொன்றினைப் பெறுவதற்கு தொழில்தருநர் ரீதியிலான பதிவுகள் ஒன்றிணைக்கப்படுகின்றன. கிரமமான கண்காணிப்பிற்கு ஆதரவளிக்கும் பொருட்டு அணுகுமுறையானது எளிமையானதாகவும் வெளிப்படையானதாகவும் பேணப்படுகின்ற வேளையில், விரிவான முறைமையியல் சார்ந்த அம்சங்கள் தனியாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

கூலி அசைவுகளினைப் பொருட்கோடல் செய்வதற்காக முறைசார் தனியார் துறைத் தொழில்வாய்ப்பில் ஏற்படும் அபிவிருத்திகள் பயனுள்ள பின்னணியொன்றினை வழங்குகின்றன. வரைபடம் சி.கு 2.1 முறைசார் துறைத் தொழில்வாய்ப்பின் அசைவுகளினை வழங்கி, கூலி அபிவிருத்திகள் மற்றும் தொழிலாளர் செலவு அழுத்தங்கள் என்பவற்றினை மதிப்பிடுகின்ற போது பரந்தளவிலான தொழிலாளர் சந்தை இயக்கவாற்றல்களினைக் கருத்திற்கொள்வதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது. இங்கே வழங்கப்பட்டுள்ள தொழில்வாய்ப்புத் தரவுகள் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்களினைத் தொடர்ச்சியாக அறிக்கையிட்ட மற்றும் சுட்டெண் தொகுப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்ற தகைமைகளைப் பூர்த்திசெய்கின்ற நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். ஆதலால், இப்புள்ளிவிபரங்கள் உத்தியோகபூர்வ தொழிற்படை மதிப்பீடுகளுடன் நேரடியாக ஒப்பிடத்தக்கதாக அமைவதில்லை.

வரைபடம் சி.கு 2.2ஆனது 2022-2023 காலப்பகுதியில் காணப்பட்ட பணவீக்கத்தினைத் தொடர்ந்து மிகவும் குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்பொன்றுடன் முறைசார் துறைக் கூலிகளின் படிப்படியான மேல்நோக்கிய போக்கொன்றினை எடுத்துக்காட்டுகின்றது. வரைபடம் சி.கு 2.3ஆனது 2025இன் நடுப்பகுதியிலான ஓரளவு மிதமடைதலுடன் நிலையான கூலி வளர்ச்சி ஆண்டின் இறுதியில் அதிகரிப்பொன்றினைத் தொடர்ந்தமையானது

சி.கு வரைபடம் ஆ 2.4
**கூலி வீத சுட்டெண்கள் மற்றும் விலை சுட்டெண்களின் (சனவரி 2022 = 100) போக்குகள்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி அலுவலகர்களின் கணிப்புகள்

பொருளாதார நடவடிக்கை, பருவகால காரணிகள் மற்றும் கூலி நிர்ணய நடைமுறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களினைப் பிரதிபலிக்கின்றது.

ஓய்வூதிய நிதியப் பங்களிப்புக்கள் ஊழியர் வருவாய்களின் நிலையான விகிதாசாரமொன்றாகக் கணக்கிடப்பட்டு, அறிக்கையிடப்பட்ட கூலிகளிற்கும் பங்களிப்புத் தொகைகளிற்கும் இடையிலான நேரடித் தொடர்பொன்றினைத் தாபிக்கின்றது. இதன் பெறுபேறாக, கூட்டுப் பங்களிப்புக்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் வருவாய்களில் ஏற்படுகின்ற அசைவுகளினைப் பரந்தளவில் பிரதிபலித்து, காலப்போக்கில் தனியார் துறைக் கூலி அபிவிருத்திகளினைக் கண்காணிப்பதற்கான பதிலீடொன்றாக அவற்றைப் பயன்படுத்துவதற்கு ஆதரவளிக்கின்றன.

## புதிய கூலி வீதச் சுட்டெண்ணின் எண்ணக்கரு சார்ந்த கட்டமைப்பு

கூலி வீதச் சுட்டெண்ணானது உண்மையான கூலி மட்டங்களை அளவிடுவதை விடவும் காலப்போக்கில் முறைசார் துறை கூலி வீதங்களிலுள்ள மாற்றங்களை அளவிடுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒப்பீட்டு அசைவுகளில் கவனம்செலுத்துவதன் மூலம், இச்சுட்டெண், பணவீக்கம் மற்றும் வெளியீடு வழிமுறைகள் உள்ளடங்கலாக காலப்பகுதி முழுவதும் அளவிடப்படக்கூடிய அத்துடன் ஏனைய பேரண்டக் குறிகாட்டிகளுடன் சேர்த்து கருத்திற்கொள்ளப்படக்கூடிய கூலி வளர்ச்சி இயக்கவாற்றல் பற்றிய குறிகாட்டியொன்றை வழங்குகின்றது.

கிடைக்கப்பெறுகின்ற கூலி வீதச் சுட்டெண், பேரண்டப்பொருளாதாரப் பகுப்பாய்விற்குப் பொருத்தமான நிலையான காலத்தொடர் ஒன்றை வழங்குகின்றது. நிர்வாகத் தரவுகளைப் பயன்படுத்துகின்றமை காலப்போக்கில் ஒப்பீட்டுத் தன்மையை அதிகரித்து மாதிரியமைத்தல் மாறுபாட்டுடன் இணைந்த தளம்பலைக் குறைக்கின்றது. கூலிச் சீராக்கங்கள், விலை அசைவுக்குத்

தொடர்புடைய தாமதமொன்றுடன் நிகழ்வதற்கு முனைவதுடன், கூலி நிர்ணயித்தல் பொறிமுறைகளையும் நிறுவனசார் ஏற்பாடுகளையும் பிரதிபலிக்கின்றது. இதன் பின்னணியில், அதிக மீடிறனுள்ள கூலி வீதச் சுட்டெண் கிடைக்கப்பெறுகின்றமை தொழிலாளர் செலவு அழுத்தங்களைக் கண்காணிப்பதை மேம்படுத்தி, அளவீட்டுத் தரவுகள் மற்றும் நிறுவனசார் கூலிச் சீராக்கங்கள் என்பவற்றிலிருந்து பெறுவிக்கப்பட்ட ஏற்கனவே காணப்படுகின்ற கூலிக் குறிகாட்டிகளுக்கு நிறைவளிக்கின்றது.

### நாணயக் கொள்கை மற்றும் தொழிலாளர் சந்தைப் பகுப்பாய்வுகளுக்கான உள்ளார்ந்தங்கள்

புதிய சுட்டெண்ணானது தனியார் துறை கூலி வளர்ச்சி, பணவீக்க அழுத்தங்கள் மற்றும் பரந்த பேரண்டப்பொருளாதார நிலைமைகள் என்பவற்றுக்கிடையிலான பரஸ்பரத் தொடர்பு பற்றிய உரியகால மற்றும் வலுவான உள்நோக்குகளை வழங்குகின்றது. கூலி வளர்ச்சியானது அடிப்படையான பொருளாதார நடவடிக்கைக்கு மாத்திரமன்றி விலை மட்டத்திலுள்ள மாற்றங்களுக்கும் பதிலிறுத்துகின்றது என்பதை சுட்டெண் பற்றிய பகுப்பாய்வு காண்பிக்கின்றது. புதிய கூலிச் சுட்டெண், விலைச் சுட்டெண்களில் அதிகரிப்பை பின்பற்றிச் செல்கின்றது என்பதை வரைபடம் சி.கு 2.4 எடுத்துக்காட்டுகின்றது. உதாரணமாக, 2022-2023 காலப்பகுதியில் சராசரி கூலிகளில் பிரகடனப்படுத்தப்பட்ட அதிகரிப்பு, உயர்வடைந்த பணவீக்க தாக்கத்தைப் பிரதிபலித்து கூலி நிர்ணயப் போக்கில் இரண்டாம் சுற்றுத் தாக்கங்களுக்கான சாத்தியத்தினை எடுத்துக்காட்டுகின்றது. மரபு ரீதியான குறிகாட்டிகளை விட மிகவும் செம்மையாக இந்த பரிணாமத்தைப் பிரதிபலிப்பதன் மூலம் புதிய கூலிச் சுட்டெண் வளர்ந்துவருகின்ற பணவீக்க அழுத்தங்களை எதிர்வுகூறுவதற்கும் பதிலிறுத்துவதற்குமான மத்திய வங்கியின் இயலளவை அதிகரிக்கின்றது.

அதிக மீடிறனுள்ள நிர்வாகத் தரவுகள் குறிப்பாக முன்நோக்கிய கொள்கைக்குப் பெறுமதிவாய்ந்தவை ஆகும். ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்களின் ஏறத்தாழ 80 சதவீதமானவற்றை வகைகூறுகின்ற இணையவழி மற்றும் இலத்திரனியல் ஊடக சமர்ப்பணங்களுடன் இத்தகவல்களின் மாதாந்தக் கூட்டு ஊழியர் செலவு அபிவிருத்திகளின் மிகவும் ஏற்ற கண்காணித்தலை இயலச்செய்கின்றது. 800,000 மேலான ஊழியர்களை உள்ளடக்கி முறைசார் தனியார் துறைக் கூலிகளின் பரந்த, மிகவும் பிரதிநிதித்துவமிக்க வழிமுறையொன்றினை வழங்குவதன் மூலம் நீண்டகாலமாகவிருக்கின்ற முறைசார் தனியார் துறை குறைந்தபட்சக் கூலி வீதச் சுட்டெண் உள்ளடங்கலாக ஏற்கனவே காணப்படும் குறிகாட்டிகளுக்கு புதிய கூலி வீதச் சுட்டெண் நிறைவளிக்கின்றது. இவ்விரிவுபடுத்தப்பட்ட உள்ளடக்கமானது கட்டமைப்பு சார்ந்த தொழிற் சந்தைப் போக்குகளை நுணுக்கமாகக் கண்காணிப்பதற்கு கொள்கை வகுப்பாளர்களை இயலச்செய்து நாணயக் கொள்கை மற்றும் கூலி தொடர்புபட்ட இடைத்தலையீடுகள் மீது சான்று அடிப்படையிலமைந்த தீர்மானங்களுக்குத் துணையளிக்கின்றது.

### கூலி கண்காணித்தலையும் எதிர்காலப் போக்குகளையும் வலுப்படுத்தல்

சுட்டெண் தொகுத்தலானது இலங்கையின் பேரண்டப் பொருளாதாரத் தரவு உட்கட்டமைப்பில் முக்கியமானதொரு மேம்படுத்தலை எடுத்துரைக்கின்றது. பாரிய தரவுப் பகுப்பாய்வு நுட்பங்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்ட 9 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குப் பெற்றுக்கொண்ட 6 மில்லியனுக்கும் மேற்பட்ட தனிப்பட்டவர் அவதானிப்புக்களிலிருந்து அனுகூலமடைந்து இச்சுட்டெண் கிரமமான, அதிக மீடிறனுள்ள தனியார் துறை கூலிகளின் கண்காணித்தலுக்கான தளமொன்றினை நிறுவுகின்றது. முன்நோக்கி பார்க்கையில் தரவுப் பகிர்தலை நிறுவனமயப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, கொள்கைப் பகுப்பாய்விற்காக மாதாந்த பங்களிப்புக்களை தங்குதடையின்றி ஒருங்கிணைப்பதை உறுதிசெய்கின்ற அதேவேளை, முழுமையான தரவுத் தொகுதிக்கு ஆண்டிற்கு இருமுறை இற்றைப்படுத்தல்கள் பேணப்படும்.

கூட்டு கூலிகளை கண்காணிப்பதற்கு அப்பால், நிர்வாக ரீதியான தரவுத் தொகுதியானது குறிப்பிடத்தக்க பகுப்பாய்வுச் சாத்தியப்பாட்டு உள்ளார்ந்த ஆற்றலையும் வழங்குகின்றது. கூலி இயக்கவாற்றல்களுக்குள் தொழில்துறைக்கு குறிப்பான நுண்நோக்குகளை வழங்குவதற்கான துறைசார் சுட்டெண்களின் உருவாக்கத்தினை திட்டமிடப்பட்ட மீள்சீராக்கம் உள்ளடக்கப்படுகின்றது. நீண்டகாலப் போக்கில், துணை நிர்வாகத் தரவுத் தொகுதிகளை ஒருங்கிணைத்தலானது கூலிப் பகுப்பாய்வுகளுக்கான பல்பரிமானக் கட்டமைப்பொன்றை அமைப்பதை இயலச்செய்து வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தி படிப்படியாக வளர்ச்சியடைகின்ற தொழில் சந்தை நிலைமைகளை மதிப்பிடுவதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய கருவியொன்றைக் கொண்டு கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் வசதியளிக்கும். கூட்டாக, இம்முயற்சிகள் கூலி மற்றும் பணவீக்கம் என்பவற்றை கண்காணிப்பதற்கான முக்கிய சாதனமாக மட்டுமல்லாது இலங்கையில் சான்று அடிப்படையிலமைந்த பேரண்டப்பொருளாதாரக் கொள்கையை வலுப்படுத்துவதற்கான முக்கிய மைல்கல்லாக இச்சுட்டெண்ணை இடம்பெறச்செய்கின்றது. முன்நோக்கி நோக்குகையில், அதன் ஆண்டு மற்றும் ஆண்டிற்கு இருமுறை வெளிவரும் வெளியீடுகள் ஊடாக ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலமைந்த முறைசார் துறை கூலி வீதச் சுட்டெண் புள்ளிவிபரங்களை வெளியிடுவதற்கு மத்திய வங்கி உத்தேசிக்கின்றது.